2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருந்தேன். தயவுசெய்து எடுங்கள். (குறுக்கீடுகள்)*

3. கவன ஈர்ப்புகள்

(அ) துறைமுகத்திலிருந்து எடுத்துச்செல்லும் வேதிப் பொருட்கள் சாலைகளில் சிதறாமல் இருக்க வாகன உரிமையாளர்களுக்குக் கட்டுப்பாடுகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடுகள்)*

(திரு. மு.பெ. சாமிநாதன், திரு. எ.வ. வேலு, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் ஆகியோர் எழுந்து நின்று ஏதோ கேட்க முற்பட்டனர்.)

***திரு. பி.கே. சேகர்பாபு :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை துறைமுகத்திலிருந்து வேதிப் பொருட்களை எடுத்துச்செல்லும்போது சாலைகளில் சிதறுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் சுகாதாரக் கேடுகள்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—*தொடர்ச்சி*

திரு. சி. ஞானசேகரன்: ** *ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். (குறுக்கீடு)

3. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி

(அ) துறைமுகத்திலிருந்து எடுத்துச் செல்லும் வேதிப் பொருட்கள் சாலைகளில் சிதறாமல் இருக்க வாகன உரிமையாளர்களுக்குக் கட்டுப்பாடுகள்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சென்னைத் துறைமுகத்திலிருந்து கந்தகம் போன்ற வேதிப் பொருட்களை தொழிற்சாலைகளுக்கு எடுத்துச்செல்லும்போது சாலையில் சிந்திவிடாமல் இருக்க சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம், பொருட்களை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகன உரிமையாளர்களும் கீழ்க்கண்ட நெறிமுறைகளைப் பின்பற்ற அறிவுறுத்தி வருகிறது :

1. சாலையில் இரசாயனப் பொருட்கள் சிந்துவதைத் தவிர்க்க நல்ல முறையில் பராமரிக்கப்படும் வாகனங்களை மட்டும் இரசாயனங்கள் மற்றும் இதர பொருட்களைக் கொண்டு செல்ல உரிமையாளர்கள் பயன்படுத்த வேண்டும்.

2. வாகன உரிமையாளர்கள் இரசாயனப் பொருட்களை வாகன உயரத்திற்கு மேல் குவித்து வைத்துக் கொண்டு செல்லக்கூடாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS